முருகப்பெருமான் துணை

**மகான் சொரூபானந்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.06.2023**, புதன்கிழமை

1. வானவர் மெச்ச அவதாரம்
   வள்ளலாய் வந்த அரங்கனே
   தானென்ற கர்வம் போக்கி
   தயவாக உலகோரை மாற்ற
2. மாற்ற அவதாரம் எடுத்த
   மாதவ ராஜனே அரங்கனே
   ஆற்றல்பட உன் பெருமை கூறி
   அறிவிப்பேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை சோபகிருது மிதுன திங்கள்
   அறிவிக்க முன்னான்கோர் திகதி புந்திவாரம்

(சோபகிருது வருடம் ஆனி மாதம் **13** ம் நாள், **28.06.2023**, புதன்கிழமை)

   நேசமுடன் சொரூபானந்தர் யானும்
   நிலவுலக நலம்பெற உரைப்பேன்
4. உரைக்கவே எங்கும் தருமம்
   உருவாக்கி பசிபிணி விரட்டி
   குறைகள் பிழைகள் பசியாலே
   குவலயம் கண்டிடா மீட்டருள
5. அருளவந்த அரங்கமகானின்
   அன்னதானம் மகத்தானது
   இருளெனும் உலக வறுமையை
   இனியும் தொடரா அகற்றி
6. அகற்றி மீட்கும் சக்தி இது
   அனைவரும் ஆதரித்து வருக
   செகத்தினில் அன்னதானக் கிளை
   சிறப்பாக எங்கும் பெருகிட

7. பெருகிட அரங்கன் சேவையாலே
பிறருக்குக் கொடுக்கும் உதவும்
தருமசிந்தை தானாகப் பரவி
தயவான மக்கள் படைகளாக
8. ஆகவே மாற்றங்கள் கண்டு
அகிலம் அழிவை நோக்கிச் செல்லா
மிகையான வளர்ச்சி மாற்றம்
முன்னேற்ற வழிகளை நோக்கி
9. நோக்கிப் பயணித்து நன்கு
நிலவுலகில் அமைதி நிறைந்த
தேக்கமிலா தொழில் வளர்ச்சி
தெய்வ சிந்தையும் வளர்ச்சி காண
10. காணவே உலக மாற்றமாக
கலியினில் அரங்கமகான் அவதாரம்
ஞானவான்கள் புடைசூழவே
ஞானயுக மாற்றம்தனை தரும்
11. தருகவே எங்கும் எதிலும்
தருமமும் தயவும் தழைத்து
நேருமை நீதி நிறைந்த பூமியாக
நிலவுலகம் ஞானபூமியாக மாறும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—